


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு நிகழ்த்தியுள்ள நான்காண்டு சாதனைகள் குறித்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் "திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு சாதனை விளக்க அணிவகுப்பை சென்னையில், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், பிரபல திரைப்பட நடிகர்கள் 'மெட்ராஸ் அன்பு' கலையரசன், அர்ச்சனா, கே.எஸ்.ரவிச்சந்திரன், ஐசிஎப். முரளிதரன், நாகராஜன், சந்துரு, மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார். பி.கே.மூர்த்தி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி

# சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் பிரச்சாரம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சேலம், மே 9-

தமிழ்நாடு முதலமைச்சரின் நான்கு ஆண்டுகால மக்கள் நலத்திட்டங்களை பொது மக்களிடையே எடுத்துரைக்கும் வகையில் சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் தெருமுனை கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்று மாவட்ட அவசர செயற்குழு கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

சேலம் மத்திய மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் மாளிகையில் நடைபெற்றது.

மத்திய மாவட்ட அவைத்தலைவர் சுபாஷ் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாவட்ட செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் கலந்து கொண்டு திமுக நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

கூட்டத்தில் அவர் பேசும் பொழுது, தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த நான்கு ஆண்டுகளில் நிறைவேற்றிய பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை பொது மக்களிடையே எடுத்துரைக்கும் வகையில் அடுத்து வரும் ஐந்து நாட்களில் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் தெருமுனை கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்று பேசிய அவர், மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட 13 பகுதிகள் மற்றும் ஏழு ஒன்றியங்கள் ஒவ்வொரு பகுதிகள், 4 பேரூராட்சி பகுதிகளிலும் தலா 4 கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்று கூறிய அவர், தேர்தல் பணிகளை தற்போது முதலில் துவங்கிட வேண்டும் என்றும் வாக்குச்சாவடி முகவர்கள் வீடு வீடாக சென்று தமிழ்நாடு முதலமைச்சரின் சாதனைகளை துண்டு பிரசங்கங்களாக விநியோகிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் மத்திய மாவட்ட பொருளாளர் கார்த்திகேயன், மாநகர செயலாளர் ரகுபதி, மாநகர மேயர் ராமச்சந்திரன், மற்றும் மாவட்ட மாநகர ஒன்றிய பகுதிகழக செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானூர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் தீர்மானங்கள் குறித்து விளக்கிப் பேசினார். கூட்டத்தில் மத்திய மாவட்ட பொருளாளர் கார்த்திகேயன், மாநகர செயலாளர் ரகுபதி, மாநகர மேயர் ராமச்சந்திரன், மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய பகுதி கழக செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் 'திராவிட மாடல்' அரசின்

# நான்காண்டு சாதனைகள் குறித்து மாபெரும் சாதனை விளக்க அணிவகுப்பு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

சென்னை,மே.9-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு நிகழ்த்தியுள்ள நான்காண்டு சாதனைகள் குறித்து இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் ஏற்பாட்டில் "திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு சாதனை விளக்க அணிவகுப்பை" 7.5.2025 அன்று, சென்னை, பெரம்பூர், பேப்பர் மில்ஸ் சாலையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் மாபெரும் சாதனை விளக்க அணிவகுப்பை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இம்மாபெரும் சாதனை விளக்க அணிவகுப்பில் பாரம்பரிய நடனம் மற்றும் மேளம், பள்ளி மாணவ, மாணவியர்களின் பேண்ட் வாத்தியம், சாரண சாரணியர்களின் அணிவகுப்பு, ராஜ மேள முழக்கங்கள், வெளிநாட்டவர்கள் நம் பாரம்பரிய உடையுடன் அணிவகுப்பு, மகளிர் சுய உதவிக் குழுவினர்களின் அணிவகுப்பு, மகளிர் உரிமைத் தொகை குழுவினர்களின் அணிவகுப்பு, பிங்க் ஆட்டோ பெண்களின் அணிவகுப்பு, நான் முதல்வன், செஸ் - ஆக்கி - முதல்வர் கோப்பை - கார் பந்தையம் விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு, தமிழ் புதல்வன், புதுமைப் பெண் ஆகிய திட்டங்களால் பயன் பெற்ற 300க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்களின் அணி வகுப்பு, காலை உணவு திட்டம், வடசென்னை வளர்ச்சி திட்டம் மற்றும் மக்களைத் தேடி மருத்துவம் என பல்வேறு சாதனைகளை விளக்குகின்ற வகையில் 3 வாகனங்களின் அணிவகுப்பு இடம் பெற்றது. இச்சாதனை விளக்க அணிவகுப்பு லூர்து பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் முடிவடைந்தது.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், பிரபல திரைப்பட நடிகர்கள் 'மெட்ராஸ் அன்பு' கலையரசன், 'பிக்பாஸ் புகழ்' திருமதி.அர்ச்சனா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், பகுதி செயலாளர்கள் ஐசிஎப்.முரளிதரன், நாகராஜன், சுதாகர், வேலு, எம்.டி.ஆர்.நாகராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சந்துரு, மகேஷ்குமார், மாநில மாணவரணி செயலாளர் ராஜீவ்காந்தி, கழக செய்தி தொடர்பாளர் ராஜா தமிழ்மாறன், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் பி.கே.பாபு, மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர்கள் திருமதி.சரிதா மகேஷ்குமார், பி.கே. மூர்த்தி, எழும்பூர் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் யாழினி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.புனிதவதி எத்திராஜன், திருமதி.சுதா தீனதயாளன், திருமதி. ராஜேஷ்வரி ஸ்ரீதர், திருமதி.தாவூத்பீ, திருமதி. சாரதா, திருமதி.யோகபிரியா, திருமதி.அமுதா, திருமதி. ஸ்ரீதணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தருமபுரி மேற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் தர்மபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி,அவைத்தலைவர் கே.மனோகரன்,மாநில நிர்வாகிகள் ராஜேந்திரன்,சத்தியமூர்த்தி,மாவட்ட நிர்வாகிகள் முருகன்,சி.கிருஷ்ணகுமார்,ராஜகுமாரி,மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள்,பேரூர் கழக செயலாளர்கள்,அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

